# இணையவழியாக கட்டணம் செலுத்தும் வசதி

## பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து தொடங்கியது பாரதிதாசன் பல்கலை.

திருச்சி,பிப்.19: மாணவ, மாணவிகள் கல்வி, தேர்வுக் கட்டணம் முதலிய கட்டணங்களை பல்கலைக்கழகத்துக்கு செலுத்துவதை எளிதாக்கும் நோக்கில், இணையவழியாக செலுத்தும் வசதியை பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து தொடங்கியிருக்கிறது பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழக ஆட்சிக்குழு கூட்ட அரங்கில் புதன்கிழமை நடைபெற்ற விழாவில் இச்சேவையை துணைவேந்தர் வெ. மா. முத்துக்குமார் தொடக்கி வைத்தார். பாரத ஸ்டேட் வங்கியின் துணைப் பொது மேலாளர் (திருச்சி கோட்டம்) பி. சிவகுமார், மண்டல மேலாளர் சி.ஆர். குணசேகரன் உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

ஆன்லைன் மூலமாக கட்டணம் செலுத்தும் வசதி குறித்து பல்கலைக்கழகத் துணைவேந்தர் வெ.மா. முத்துக்குமார் கூறியது:

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய எல்லா வித கட்டணங்களையும் இந்த இணையவழி வாயிலாக செலுத்தலாம்.

வங்கியின் எந்த கிளையிலிருந்தும் எந்த பகுதியிலிருந்தும் டெபிட் கார்டு அல்லது கிரடிட் கார்டு மூலமாகவோ, இணைய வங்கி சேவை மூலமாகவோ பல்கலைக்கழகத்துக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை மாணவ, மாணவிகள் செலுத்தலாம்.

இந்த வசதி இல்லாதவர்கள், பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து கட்டணப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து வங்கியின் எந்த கிளையில் வேண்டுமானாலும் செலுத்தலாம்.

இணையவழி சேவையைப் பயன்படுத்த வசூலிக்கப்படும் சேவைக் கட்டணத்துடன், கேட்பு வரைவோலை எடுக்க செலுத்த வேண்டிய பரிமாற்றக் கட்டணத்தை ஒப்பிடும் போது மிகவும் குறைவு,

மாணவர்கள் கட்டணத்தைச் செலுத்தியதற்கான ரசீதை தொலைத்துவிட்டாலும்

மீண்டும் ரசீது பெறும் வசதி இச்சேவையில் உண்டு. பல்கலைக்கழக இணைவுப் பெற்ற கல்லூரிகள் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் துணைவேந்தர் வெ.மா. முத்துக்குமார்.